# முரசொலி



அன்புள்ள மாதவி,

சீனுவைப் பற்றி எழுதுவதாகச் சென்ற கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். நான் உனக்கு இந்தக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கும்பொழுது, குமாய், மட்சு தீவுகள்மீது கம்யூனிஸ்ட் சீன விமானங்கள் குண்டு பொழியும் செய்தியும் 'தேசிய சீனு'வின் கப்பல்கள் அதனால் அங்கு சரக்குகளை இறக்க முடியாமல் திரும்பிய செய்தியும், ரேடியோவின் மூலம் கேட்டுக் கொண்டேயிருக்கிறேன். ஒரே நாட்டுக்கு இரண்டு அரசுகள் இருப்பதும், அவற்றில் எது சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட வேண்டிய அரசு என்பது பற்றி உலகம் குழம்பிக் கொண்டிருப்பதும் விந்தையிலும் விந்தை!

சீன வரலாறு புதுமையானதும் புதிர்கள் நிரம்பியதும் ஆகும். தமிழகத்தைப்போலவே சீன நாட்டுக்கும் ஒழுங்கான வரலாறு இல்லை. அந்நாட்டு வரலாற்றில் பெரும் பகுதி இருண்ட காலமாகவே காட்சியளிக்கிறது. மா-சே-துங்கும் சௌ-என்-லாயும் சீனுவில் தோற்றுவித்து வளர்த்துவரும் மறுமலர்ச்சி சகாப்தம் பெற்றெடுக்கும் புதிய வரலாற்று ஆசிரியர்கள் ஒருவேளை ஒழுங்கான, முறைப் படுத்தப்பட்ட சீன வரலாற்றை நமக்குத் தொகுத்துத் தரக்கூடும். ஆனால் அதிலும் கொள்கை அடிப்படையில் இருட்டடிப்பு வேலைகள் நடைபெருமல் ஒழுங்காக இருக்குமா என்பது ஐயப்பாட்டிற்குரியதே!

சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் சீன நாகரிகமும் எகிப்து, சுமேரிய நாகரிகங்களைப் போலவேதான் இருந்திருக்க வேண்டும். அங்கு வாழ்ந்த ஆதிக்குடிகள் மங்கோலியர்கள் என்று சொல்லுவதற்கு ஆதாரம் ஏதுமில்லை. எகிப்திய—சுமேரிய — திராவிட நாகரிகங்களின் கூட்டுச் சரக்காகவும் சீன நாகரிகம் இருந்திருக்கக் கூடும் என்று எண்ண இடமுண்டு. அந்தக் காலத்தில் உயிர்ப் பலி கொடுக்கும் பழக்கம் சீன நாட்டில் இருந்து வந்திருக்கிறது. கி. மு: 1750-ல் சீன நாடு பல சிறு நாடுகளாகப் பிரிந்து இருந்திருக்கிறது. இந்தச் சிறு நாடுகளெல்லாம் 'தேவகுமாரன்' என்று கருதப்பட்ட ஒரு பிரதம மத குருவிடம் பக்தி விசுவாசத்தோடு இருந்து வந்திருக்கின்றன. அப்பொழுது செல்வாக்குடன் ஆண்டுவந்த வம்சம் 'ஷாங்' வம்சமாகும். ஷாங் வம்ச ஆட்சி கி. மு. 1125 வரை நீடித்தது.

அதற்குப் பின் சீனுவில் ஆட்சிக்கு வந்த வம்சம் 'சௌ' வம்சமாகும். இந்த வம்சம் சீனுவில் ஆண்ட நேரத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் மௌரிய வம்சமும், எகிப்து நாட்டில் டாலமி வம்சமும் (எழிலரசி கிலியோபாட்ரா இந்த வம்சத்தைச் சேர்ந்தவளே) ஆட்சி புரிந்தன. சௌ வம்ச ஆட்சியின் இறுதியில் சீனு மேலும் பல சிறு நாடுகளாகப் பிரிந்தது. கி. மு. 600-ல் சுமார் 6000 சிறு நாடுகள் சீனுவில் இருந்ததாக சொல்லப்படுகிறது. இந்தக் காலத்தையே சீன வரலாற்றில் 'குழப்ப காலம்' (Age of Confusion) என்று குறிப்பிடுகிருர்கள்.

எந்த ஒரு நாட்டிலும் குழப்பம் மேலோங்கி நிற்கும்பொழுது பெரிய சிந்தனையாளர்களும் தீர்க்கதரிசிகளும் தோன்றுகிருர்கள். காலத்தின் தேவை அவர்களை உருவாக்குகிறது. அவர்கள் உருவானபின் காலப் போக்கைப் புதிய பாதையில்—செம்மையான பாதையில் — திருப்ப முயற்சிக்கிருர்கள். அதன் விளைவாகப் புதிய எண்ணங்களும் தத்துவங்களும் பிறக்கின்றன. வரலாற்றுப் பாதையில் புதிய மைல் கற்கள் அமைக்கப்படுகின்றன. மனிதனின் கதை ஒரு திருப்பம் பெறுகிறது. சீன நாட்டின் 'குழப்பக் காலத்தில்' தெளிவு பிறக்கச் செய்தவர்கள் இருவர்.

ஒருவர் கன்ஃப்யூஷியஸ்; மற்ருெருவர் லோட்ஸி.

கன்ஃப்யூஷியஸ் மேட்டுக் குடியைச் சேர்ந்தவர். தன்னுடைய நாட்டில் நிலவிவந்த குழப்ப நிலையை எண்ணி மனம் வருந்திஞர். மக்களிடத்தில் ஒற்றுமையில்லை. அவநம்பிக்கையே எங்கும் மேலோங்கி நின்றது. பணக்காரர்களும் பதவியிலிருப்போரும் சட்டத்தைத் துச்சமென எண்ணி நடந்தனர். எங்கும் பாதுகாப்பின்மை நிலவியது. வியாபாரத்தில் ஒழுங்கீனம் தலை தூக்கி நின்றது. இந்த இழிநிலையைப் போக்கி, மக்களிடத்தில் நம்பிக்கையுணர்ச்சியும் நல்லுறவும் நிலவச் செய்ய வேண்டுமென்று கன்ஃப்யூஷியஸ் தீர்மானித்தார். இளைஞர்களை நல்வழிப் படுத்துவதே வருங்காலச் சமுதாயம் திருந்துவதற்கு உள்ள ஒரேவழி என நம்பினுர். எனவே




இளைஞர்களை ஒழுக்க நெறியில் பயிற்றுவிக்கக் கலாசாலை ஒன்றை நிறுவினர். இக் கலாசாலையை நிறுவிய பொழுது அவருக்கு வயது 22தான்!

சீனநாடு முழுவதிலிருந்தும் இளைஞர்கள் வந்து அக் கலாசாலையில் குழுமினர். பணக்காரர்களிடம் நிறைய சம்பளம் வசூலிக்கப்பட்டது. கெட்டிக்கார ஏழை மாணவர்கள் இலவசமாகவே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கலாசாலைக் குருவாக இருந்து மாணவர்களுக்குக் கல்வியும் ஒழுக்கமும் போதித்த நிலையில்கூட, தான் வாழ்ந்த லூ சமஸ்தானத்தில் பார்த்து வந்த அரசாங்க அலுவலையும் கன்ஃப்யூஷியஸ் விட்டு விடவில்லை.

லூ சமஸ்தானத்தை ஆண்டு வந்த மன்னர் மற்ருெரு மன்னரால் தோற்கடிக்கப்பட்டார். நாட்டை இழந்த அவர் ஓட்டம் பிடித்தார். அவருடைய ஆதரவில் இருந்த கன்ஃப்யூஷியசும் அவருடன் சென்ருர். சில ஆண்டுகளுக்குப் பிறகு தனது தாய் பூமியான லூவிற்கே திரும்பி வந்தார். மக்கள் அவருக்கு மிகுந்த மரியாதை செலுத்தி வரவேற்றனர். தன் வாழ்நாள் முழுதும், தனது திட்டங்களை அமுல் நடத்தக்கூடிய ஒரு மன்னன் கிடைக்க மாட்டாஞ என்று ஏங்கிஞர். சிந்தனையாளர் தம் எண்ணங்களை பரீட்சிக்கப்பட வேண்டுமென்று துடியாய்த் துடிப்பதை வரலாற்றில் பல சமயங்களில் பார்க்கிருேம். (கிரேக்கச் சிந்தனையாளன் பிலேட்டோகூட தன் திட்டங்களை செயல் படுத்தும் மன்னனைத் தேடிப் பல காலம் அலைந்திருக்கிருர். முடிவில் டயோனிசியஸ் என்ற கொடுங்கோலன் ஒருவனின் ஆலோசகராகப் பிலேட்டோ சில காலம் இருந்தார். டயோனிசிஸ், சிசிலி தீவிலிருந்த சிராகஸ் நாட்டை ஆண்ட மன்னன்—இருவரிடையேயும் தொடர்பு வெகுநாள் நீடிக்கவில்லை.) லூ சமஸ்தானத்தின் மன்னர், கான்ப்யூஷியசின் பெருமையை உணர்ந்து அவரைப் பிரதம நீதிபதியாக்கினுர். அப்பொழுது கன்ஃப்யூஷியசுக்கு வயது 52. சீக்கிரமே அவர் அந்த நாட்டின் பிரதம மந்திரியும் ஆனுர். தனது இலட்சியக் கனவை நிறைவேற்றிக் கொள்ள கன்ஃப்யூஷியசுக்கு

இது ஒரு அரிய வாய்ப்பாயிற்று. சில ஆண்டுகளிலேயே தனது அரிய திட்டங்களாலும் அற்புதமான நிர்வாகத் திறமையாலும் லூ சமஸ்தானத்தை ஒரு இலட்சிய சமஸ்தானமாகவே ஆக்கிஞர். கன்ஃப்யூஷியஸ் அன்று அமுலாக்கிய திட்டங்களை எண்ணினுல், அவர் எவ்வளவு பெரிய தீர்க்கதரிசியாக விளங்கியிருக்கிருர் என்பதைக் கண்டு வியக்க வேண்டியிருக்கிறது. நவீன முறைகள் என்று நீயும் நானும் கருதும் எத்தனையோ திட்டங்களை 2500 ஆண்டுகளுக்கு முன்பே கன்ஃப்யூஷியஸ் நடைமுறையில் நடத்திக் காட்டியிருக்கிருர்.

வியாபாரிகள் பொருள்களைப் பதுக்கி வைத்து, ஏழை மக்களிடம் கொள்ளை லாபம் அடிக்காமலிருக்கப் பொருள்களின் விலைகளை நிர்ணயித்தார். இதைத்தான் இப்பொழுது 'கன்ட்ரோல்' என்று சொல்லுகிருேம். ஒவ்வொருவரின் திறமை, தகுதி, உடலுறுதி ஆகியவற்றைப் பரிசீலித்து அதற்கேற்பவே வேலைகள் வழங்கினுர். உணவைப் பற்றி ஆராய்ந்து, மனித வேலையின் தரத்தையொட்டி உணவுப் பழக்கம் அமைய வேண்டுமென்றுவற்புறுத்திஞர். பிரபுக்களின் யதேச்சாதிகாரத்தைத் தடுக்க சட்டங்கள் செய்தார். இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் நீதி கிடைக்க வழி செய்தார். 2500 ஆண்டுகளுக்கு முன் இப்படி ஒரு ஆட்சி இருந்ததென்று கேள்விப் படுகிற பொழுது, நமது நிலைமையை எண்ணிப் பார்த்தால் நமக்கே சிறிது வெட்கமாகத்தான் இருக்கிறது. ஆம் மாதவி, உண்மையான நாட்டுப் பற்று உடையவன் மட்டுமே தனது சமுதாயத்துக்கு நல்ல உருப்படியான சேவைகளைச் செய்ய முடியும். பொதுவாழ்க்கையை வியாபார உபாயமாகக் கையாளும் மக்களைக் கொண்ட நாடு வாழ்ந்ததற்கு வரலாற்றில் சான்றில்லை.

நன்மை தலை தூக்குகின்ற பொழுது தீய சக்திகள் ஒன்றுபட்டு அதை அழிக்க முயல்வது வரலாற்றில் காணப்படும் மற்ருெரு உண்மை! கன்ஃப்யூஷியசின் புகழ் வளர்வதைக் கண்டு பொருமை கொண்டோரும், அவர் இயற்றிய சட்டங்களால் பாதிக்கப்பட்டோரும் சதியை உருவாக்கினர். நீதி பலமிழந்து விழுந்தது; அதர்மம் வெற்றி முரசு கொட்டியது. பிரதம மந்திரியாக நான்காண்டு காலம் சேவை செய்த பின் கன்ஃப்யூஷியஸ் தன்னுடைய வேலையைத் துறந்தார். லூ சமஸ்தானத்தை விட்டே வெளியேறினுர். தனது ஆலோசனைக்கிணங்க ஆட்சி செய்யும் மன்னன் கிடைக்க மாட்டாஞ என்று சீன நாடெங்கும் சுற்றியலைந்தார்; பலன் கிட்டாமலே போயிற்று. தங்கள் தலைவரின் அறவுரைகளை இழக்க மனமில்லாத மாணவர்கள் மட்டும் அவர் செல்லுமிடமெல்லாம் அவரோடு சுற்றித் திரிந்தனர்.

சீன மக்களின் தேசிய குணத்தை (National character) உருவாக்கியதில் கன்ஃப்யூஷியசின் போதனைகளுக்கு முக்கிய

## சீனுவை உருவாக்கிய சிந்தனையாளர்கள் 6

[தொடர்ச்சி பக்கம்—7]




வெள்ளி 19—9—58 சென்னை

# நாம் பிறந்தோம்!



படத்திலிருக்கும் இந்த இளம் தாடி வாலிபனுக்கு வயது இருபத்திரண்டுதோன்— பேயர் ஸ்டேபோ ஸ்டீபன். அவன் அருகி லிருக்கும் ஆரணங்கு; பத்தோன்பதே வயதுடையாள்—நாடியா எனும் பேயர் கோண்டாள்!

இருவரும் வாழ்க்கை இன்பத்தின் அரிச்சுவடியைப் படிக்க ஆரம்பித்திருக்கும் இளம் காதலர்கள்! இந்த இளஞ் சிட்டுகேள் சுகம் தான் வாழ்க்கையின் இலட்சியம் என்று ஒருக் கணம் யோசித்து முடிவு செய்திருந்தால் இந்தப் படத்தை நாம் எல்லோரும் பார்த் திருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது.

இவர்கள் தேடியதும் சுகம்தான்! ஆனுல் தனிப்பட்ட சோந்த சுகமல்ல; தாயகத்தின் சுகம்!

அதனுல்தான் அந்த வாலிபன் பேய்ருட்டில் உள்ள அமேரிக்க சர்வகலாசாலேயில் பட்டம் பேற்றிருந்தும் பதவி தேடிப் போகவில்லே. பைங்கிளிபோல் பக்கத்தில் பாவை ஒருத்தி இருந்தும் பூங்காவிலே போழுதுபோக்கிய நேரம் தவிர, மீதி நேரத்தை அராபிய தேசீய இனத்தை எப்படி ஒன்றுபடுத்துவது—எனும் சிந்தனேயிலே சேல விட்டான்!

ஜோர்டானின் அரசர் ஏகாதிபத்தியத்தின் கைக் கூலியாக இருப்பது கண்டு இவன் உள்ளம் குமுறிற்று. இதற்கேல்லாம் ஒரே மாற்று நாசர் கண்ட அராபிய தேசீய இனக் கோள்கைதான் என முடிவு கண்டான்.

அதன் விளேவாக, இந்த இளங் காதலர் உள்ளங்கள் புரட்சி இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டன. இதற்கிடையில் இவர்களுக்கு கோஞ்சம் சோந்த வாழ்க்கையை கவனித்துக் கோள்ளவும் நேர மிருந்தது.

சில மாதங்களுக்கு முன்பு இவர்கள் பேற்ருேர்கள் திருமணத் திற்கு ஏற்பாடு செய்தனர். அதன் விளேவாக சில வாரங்களுக்கு முன்பு அவர்கள் மணமேடையில் நிற்கவில்லே; நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

ஆமாம்; ஜோர்டானின் தலேநகரான அம்மான் அரசாங்க அலு வலகத்தை வேடி வைத்துத் தகர்த்த முற்பட்டதாக இவர்கள் இரு வரும் கைது செய்யப்பட்டனர்! நாடியாவின் கைப் பையில் நான்கு வேடிகுண்டுகேள் கண்டுபிடிக்கப்பட்டனவாம்!

இருவரும் நீதி மன்றத்தில் தாங்கள் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஒப்புக் கோண்டனர். நாடியாவோ தன்னேப் போலீசார் நிர்வாணமாக்கியதாகவும், காலிலும் தோடையி லும் நையப் புடைத்ததாகவும், கற்பழிப்பதாகச் சோல்லி பயமுறுத் தியதாகவும் அறிவித்தாள்.

'அல்ஷாப்' எனும் எகிப்து நாட்டுப் பத்திரிகை "அந்தக் கோழை மன்னன் போதமக்கள் முன்னிலேயில் தனது பலகீனத்தையும் கையாலாகாத் தன்மையையும் உணர்ந்து, தான் சண்டையிடுவதற் குத் தகுந்த ஜோடியாக—கேவலம் ஒரு பேண்ணேத் தேர்ந்தேடுத் திருக்கிருர்!" என்று எழுதிற்று.

கேய்ரோ வானேலி நிலேயம், "இந்த இளங் காதலர்களேக் குற்றவாளிகள் என்று தீர்மானித்தால், அந்த நீதிபதிகளே சும்மாவிட மாட்டோம்!" என்று எச்சரிக்கை செய்தது.

இரண்டு மணி நேர தீர்க்க ஆலோசனேக்குப் பிறகு நீதிபதிகள், இருவரையும் குற்றவாளிகள் என்று தீர்மானித்து, காதலன் ஸ்டேபோவுக்குத் தூக்குத் தண்டனேயையும், காதலி நாடியாவுக்கு மூன்று வருட சிறைத் தண்டனேயையும் அளித்தார்கள்.

நீதிபதிகள் தண்டனே வழங்கியபோது; விடுதலேப் படையிலே தங்கள் வாழ்க்கையைப் பணயமாக வைத்து அணிவகுத்து நின்ற அவர்களது படம்தான் மேலே இருப்பது.

—இப்படி ஆயிரமாயிரம் இளங் காதலர்கள் தாயக விடுதலேக் காக தங்கள் தலேகளே அறுத்துக் கோடுக்கத் தயாராகி விட்டார்கள் அங்கே! அராபிய தேசீய உணர்ச்சி எரிமலேயைப்போல் வேடித்து ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் இலட்சோப இலட்சம் சகோதரர்களே ஒன்று சேர்க்கிறது.

அராபியர்கள் ஒரு நாட்டிலல்ல; பலப்பல நாடுகேளிலே சிதறிக் கிடக்கிருர்கள்!

'நாங்கள் எல்லாம் அராபியர் என்ற தேசீய இனத்தைச் சேர்ந்த வர்கள்' என்கிற ஒரே உணர்ச்சிதான் அவர்களே ஒரு அணியின் கீழ்க் கோண்டுவருகிற சக்தியாக விளங்குகிறது!

அதேபோல் 'நாமேல்லாம் திராவிடர் என்ற இனத்தைச் சேர்ந் தோர்' என்கிற தேசீய உணர்ச்சிதான் நம் இனத்தை ஒன்று சேர்க்கவேண்டும்! அந்த உன்னத இலட்சியத்தை உருவாக்குவதற் காக ஒன்பது ஆண்டுகேளுக்கு முன்பு உதய சூரியன்போல் எழுந்தது திராவிட முன்னேற்றக் கழகம்!

சேப்டம்பர் **17**—நம் சிந்தை கவர்ந்த நாள்! பேரியார் பிறந்த நாள்!

சேப்டம்பர் **17**—சிந்தாத கண்ணீரை நாம் சிந்திய நாள்! பேரி யாரை விட்டுப் பிரிந்து புதுக் கழகம் கண்ட நாள்!

சேப்டம்பர் **17**—சேங்குருதி தந்து நாடு மீட்போம்—என்று சபத மேடுத்திடும் நாள்! திராவிட நாட்டுப் பிரிவினே நாள்!

மறக்கமுடியாத மூன்று இலட்சியங்கள் பின்னிக் கிடக்கும் இந்த நன்னுளிலே நாட்டு விடுதலே பேற தேன்னகத்தின் பட்டி தோட்டிகளில் எங்கும் நம்மனேர் சபதம் எடுத்திடுகின்றனர்!

"சோலேயிலே தேன்றலிலே சோகுச பின்னர்—சோந்த நாட் டைக் காப்பாற்ற சுழற்று வாளே!"—என்று கோக்கரிக்கும் காதலர்கள் ஜோர்டானில் மட்டுமேல்ல; திராவிடத்திலும் உண்டு என்பதை எடுத் துக் காட்டுவதுபோல் இங்குள்ள இளந் தம்பதிகள் நாடு பிரியும் நன் னுளே நோக்கி இலட்சியக் கனவு காண்பதை நாமும் உணர்கிருேம்!

வயதேறியோர் இன்பத் திராவிடம் தம் காலத்திற்குள் கிடைத்து விடாதா—என்று குமுறுவதும் நம் காதுகளுக்குக் கேட்கிறது!

இளஞ் சிறுர்கள் அந்த 'பாக்கியம்' நிச்சயம் எங்களுக்கு உண்டு—என்று துள்ளிக் குதிப்பதும் தேரிகிறது!

சேப்டம்பர்—**17**, இந்த மூன்று சாராரின் இலட்சியக் கனவு களே ஒருசேர நிறைவேற்றவேண்டும்—என்கிற உறுதியை மீண்டும் நிலே நாட்டுமோக!

கீ




## சென்ற இதழில்....

கோயில் காளை சிவாவை அடக்குபவனுக்கே பொன்மணி மாலையிடுவாள் என்று சுருளி மலை அறிவித்ததும், அந்தப் போட்டியில் கரகமாடிக் கண்ணனும், தீச்சட்டிச் சிங்காரமும் குதிப்பதாக மார் தட்டுகின்றனர். அதைக் கேட்ட அறவாழி திடுக்கிடுகிருன்...

பொன்மணி கலங்கித் தவிக்கிருள். கற்பூரமோ காளைப் போட்டியில் சிங்காரம் வெற்றியை பெற்றுவிட, கண்ணன் தன்னை நாடி வரவேண்டும் என்று விரும்புகிருள்...

சுருளிமலை சிவாவைப் போட்டிக்குத் தயாராக்குகிருன். போட்டிக்குத் தயாராகின்றனர், சிங்காரமும், கண்ணனும்...


பஞ்சாயத்தார் பரமசிவம் தலைமையில் ஊர் பிரமுகர்கள் சிலர் பூஞ்சோலையம்மாளைச் சந்தித்து, இந்தத் திருமண ஏற்பாட்டுக்கு பொன்மணியின் எதிர்ப்புக்கிடையேயும் ஒப்புதல் பெற்றுவிடுகின்றனர்...

ஆனால், அறவாழியோ தன் உள்ளப் போராட்டத்தைத் தாங்கமுடியாமல் பொன்மணியைச் சந்திக்கச் செல்கிருன். சந்தையிலிருந்து திரும்பிவந்த பொன்மணி அவனிடம் எதுவும் பேசாமல் நடக்கிருள்...

ஊர்க்கோடியிலுள்ள பாழுங் கிணற்றுக்கு அருகே வந்ததும் திடீரென்று நின்று, "உங்கள் பொன்மணி உங்களைத் தவிர வேறு யாருக்கும் சொந்தமில்லை...இந்தப் பேச்சு தவறுமேயானல நான் இந்தக் கிணற்றுக்குள் கிடப்பேன்!" என்கிருள்...

அவர்களது உரையாடலைக் கேட்டுவிட்ட பஞ்சாயத்தார் மகன் சிரஞ்சீவி தன் தந்தையிடம் இதைச் சொல்ல ஓடுகிருன்...

* * *




கண்ணைக் கசக்கியவாறு வீட்டுக்கு வந்த பொன்மணியைப் பார்த்துப் பூஞ்சோலை திடுக்கிட்டாள். ஐந்தாறு நாட்களாகவே அவள் வாட்டமாயிருப்பதைப் பூஞ்சோலை அறிந்திருந்தும் எதுவுமே அவளிடம் கேட்காமலிருந்துவிட்டாள். சந்தைக்குப் போன பெண் அழுது கொண்டு வருவதற்குக் காரணம் எதுவாகயிருக்கும் என அறிவதிலே பூஞ்சோலைக்கு ஆவல் அதிகமாயிற்று.

"என்னம்மா இது; வருத்தமா வர்றே? ஏன்—சந்தையிலே என்ன நடந்தது?"

பூஞ்சோலையின் கேள்விக்குப் பொன்மணியால் பதில் கூற இயலவில்லை. மௌனமாக இருந்தாள். அவளையும் மீறிக் கண்கள் நீரைப் பொழிந்துகொண்டிருந்தன.

"ஏன்? வழியில் பானைகளை உடைத்துவிட்டாயா? போனல் போகிறதே—அதறகாக அழுது என்ன பிரயோஜனம்?"

பூஞ்சோலை, அவளே ஒரு காரணத்தைக் கண்டு பிடித்துத் தேறுதலும் கூறினாள். அதுவல்ல காரணம் என்பதுபோல பொன்மணி, பானை விற்ற காசுகளைத் தாயாரின் கையில் கொடுத்து விட்டுத் தேம்பித் தேம்பி அழுதாள்.

"சொல்லம்மா விஷயத்தை! என்ன நடந்துச்சு?"

"இன்னும் என்னம்மா நடக்க வேண்டும்? எல்லோரும் சேர்ந்து என் தலையில் கல்லைப் போடப் போகிறீர்களே!"

தாயாரைக் கட்டிக்கொண்டு செருமிச் செருமி அழத் தொடங்கினாள். பூஞ்சோலையின் கண்களும் கலங்கின. அவளால் மகளை எப்படி சமாதானப் படுத்த முடியும்?

"ஏம்மா — ரெண்டு பேரும் போட்டி போடுறாங்க! ரெண்டு பேரில் யார் ஜெயித்தாலும் உன்னை அன்பா வச்சுத்தான் குடித்தனம் நடத்தப்போறாங்க! இதுக்கு ஏன் கவலைப்படணும்?"

"இருவரையுமே எனக்குப் பிடிக்கவில்லையம்மா. அவர்களில் யாரோடு சேர்ந்து வாழ்க்கை நடத்தவும் நான், தயாராயில்லை. வெற்றி பெற்றவன், வேண்டுமானல் என் பிணத்துக்குத்தான் தாலி கட்ட வேண்டும்!"

"இது என்னம்மா சங்கடம்? இடி விழுந்து கிடக்கிற என் மனசிலே ஏதேதோ சொல்லி இன்னும் கலக்கத்தை அதிகப் படுத்துறியே கண்ணு! உனக்கு யாரைக் கல்யாணம பண்ணிக்கணும்னு இஷ்டம்? அதைத் தான் சொல்லேன்!"

"என் இஷ்டத்தைத் தெரிவித்தால் அப்படியே நடத்தி விடுவீர்களா?"

"உன் ஆசையைத்தான் சொல்லேன்!"

"நம் ஊருக்கு வந்திருக்கிறாரே ஆசிரியர்—அவரும் நானும் திருமணம் செய்துகொள்வதாகத் தீர்மானம் செயதுகொண்டிருக்கிறோம் அம்மா!"

இதைக் கூறிவிட்டுப் பூஞ்சோலையின் காலடிகளில விழுந்து அழ ஆரம்பித்தாள் பொனமணி.

"அய்யோ! அப்படியா என் தங்கமே! இந்த வம்புக்கு நான் என்ன செய்வேன்? அந்த அறவாழி அருமையான பையன் தான். உன் அழகுக்கு ஏற்றவன்தான். ஆனல் அந்தப் பிள்ளையாண்டானுக்கும் உனக்கும் கல்யாணம் செய்ய ஊர் ஒத்துக் கொள்ளாதே! ஊரார் தீர்மானத்துக்கு விரோதமாக நடந்தால் நம்மை அனைதைக் குடும்பமா ஒதுக்கி விடுவார்களே பொன்மணி!"

பூஞ்சோலை கதறினாள். பொன்மணி விம்மினாள். மகளின் மன வாட்டத்தைப் போக்க மார்க்க மறியாது தவித்தாள் அன்னை! அன்னையின் வேதனையை அதிகப்படுத்துகிறோமே யென்று தனக்குத் தானே நொந்து கொண்டு சுருண்டு கிடந்தாள் மகள்.

அப்போது சுருளிமலை வேகமாக உள்ளே நுழைந்தான். அவன் நடவடிக்கையில் அது வரையில் என்றுமே காணப் படாத சுறுசுறுப்பு அவனிடம் காணப்பட்டது. பேச்சிலும் விறுவிறுப்பு இருந்தது.

"ஏனம்மா கவலைப்படுறீங்க? உங்க கவலையும் அக்கா கவலையும் தீர ஒரு வழி கண்டுபிடிச்சுட்டேன்" என்றான். இருவரும் அவனைப் பரபரப்பாகப் பார்த்தார்கள்.

"போட்டியில் இப்போது கலந்து கொள்கிறவர்கள் ரெண்டு பேர் அல்ல—மூனு பேர்!" என்றான்.

"மூன்றாவது ஆள் யார்?"

"அதுதான் அறவாழி!"

"யார் அவரா?" — பொன்மணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவ்வளவு முரட்டுக் காளையை அடக்குவதற்கு அவரால் முடியுமா—என்ற பீதி அவளைத் திகிலடையச் செய்தது.

"நீ ஏனக்கா வருத்தப்படுறே? நீ அறவாழியையே கல்யாணம் பண்ணிக்கலாம்; அவ்வளவுதானே!" என்று கூறிவிட்டுச் சுருளிமலை வீட்டை விட்டு வெளியேறினான்.

சுருளிமலை தந்த தகவல் பொன்மணிக்கு மிக அதிர்ச்சியாகிவிட்டது. சாப்பாடுகூடத் தேவையில்லை யென்று கூறிவிட்டு பட்டினியாகவே தரையில் படுத்து கண்கள் களைத்துப் போகும்வரையில் அழுது தீர்த்தாள்.

●

பைத்தியக்கார மகன் மூலம் அறவாழி பொன்மணி சிநேகித்தைக கேள்விப்பட்ட புஞ்சாயத்துக்காரரும் அதிக ஆத்திரமடைந்தார். அருகே யிருந்த கண்ணனும் இந்த ஆத்திரத்தை அதிகபபடுத்தினான். அறவாழியை எப்படியாவது தொலைத்துவிடதான் வேண்டுமென்று கங்கணம் கட்டிய அவர்கள் காதில், அறவாழியும் போட்டியில் கலந்து கொள்ளப் போகிறான் என்ற செய்தி எட்டியது.

"தொலைந்தான் பயல்!" என்றான் கண்ணன்.

பஞ்சாயத்தார் பரமசிவம், சிங்காரத்தையும் கண்ணனையும் சமாதானப்படுத்தச் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாகி, இப்போது இருவரையுமே மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் காட்சியைக்

படித்தீர்களா?

## நாத்திகம்

(மாதம் இருமுறை)

முதல் இதழ் விற்பனையாகிறது!

தனிப் பிரதி 12 காசுகள் — ஆண்டு சந்தா ரூ. 3

விபரங்களுக்கு:—
நாத்திகம், சென்னை-4

காணுகிற நெருக்கடிக்கு ஆளாகி சங்கடப்பட்டுக் கொண்டு இருந்தார். அந்த சங்கடத்தை சற்றுத் துடைப்பதுபோல் அறவாழி போட்டியில் கலந்து கொள்வது அவருக்கு சந்தோஷத்தை அளித்தது. ஏனெனில் அறவாழியின் கொள்கைகள் அவருக்கு உடன்பாடானவை அல்ல. முதல் சந்திப்பிலேயே இருவருக்கும் மன எரிச்சல் அதிகமாகி விட்டது. கோயில் காளை சிவா, எப்படியும் அறவாழியைப் பதம் பார்த்துப் பாடம் கற்பித்து விடும் என்று அவர் நம்பினார். போட்டி நாளும் எல்லோருடைய ஆவலையும் தூண்டிக் கொண்டே நெருங்கி விட்டது.

●

அன்றுதான் கடைசி ஞாயிற்றுக்கிழமை! சிற்றூரில் மாரியம்மன் கோயில் திடலில் ஏராளமான மக்கள் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டார்கள். உள்ளூர் வெளியூர் மக்கள் கட்டு சாத மூட்டைகளுடன் திடலில் முகாமிட்டனர். பஞ்சாயத்தார் பரமசிவமும் வேறுசில முக்கிய பிரமுகர்களும் பிரதான இடத்தில் அமர்ந்து போட்டியைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்.

போட்டி தொடங்குவதற்கு முன் ஒரு சிறு ஐயப்பாடு எழுந்தது. மூவருமே காளையை அடக்கிவிட்டால் என்ன செய்வது என்பதுதான் அந்தக் கேள்வி! பைத்தியக்காரனாக இருந்தாலும் வேடிக்கையாக சிரஞ்சீவி கேட்ட கேள்வி அது! அது பெரும் பிரச்சினையாகி விட்டது. ஒவ்வொருவரும் காளையிடம் தனித் தனியே போரிட வேண்டும். மூவருமே காளையை அடக்கி விட்டால், பிறகு மூவருக்குள்ளே வேறு ஒரு போட்டியை ஏற்படுத்தி அதில் ஜெயிப்பவர்களுக்குப் பொன்மணியைப் பரிசாகத் தருவது–என்று பேசி முடிவெடுக்கப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்தில் காளையுடன் சுருளிமலை திடலுக்கு வந்து சேர்ந்தான். கண்ணன், சிங்காரம், அறவாழி மூவரும் ஒருவர்பின் ஒருவராகத் திடலுக்குள் நுழைந்தார்கள்.

கற்பூரத்தின் கண்கள், பெண்கள் கூட்டத்திலேயிருந்து திடலிலே கம்பீரமாக நிற்கும் கண்ணன்மீது பாய்ந்து அவனை சபித்துக் கொண்டிருந்தன.

முதலில் சிங்காரம் போட்டியில் குதிக்க வேண்டும் என்று குலுக்குச் சீட்டு விழுந்தது. சிங்காரம் போருக்குத் தயார் ஆனான். அவன் நெஞ்சு விம்மியது. கண்கள் அகலமாயின. சிறிது அதிகமாகவே அவன் அருந்தியிருந்த சாராய வாடை கூட்டத்தினர் மூக்கைத் துளைத்தபடி யிருந்தது. போட்டியில் தனக்கே வெற்றி யென்று அவன் நம்பினான். அவன் இதயத்திலே பேச்சொலி எழுந்தது.

“பொன்மணியை அடைவதற்காக இந்தப் போட்டி இல்லை! இல்லவே இல்லை! போட்டியில் பரிசாகக் கிடைக்கும் அவளை என் தங்கையாக பாவிப்பேன். அவளை அடைய வேண்டியவன் அறவாழி. முதலில் எனக்கு வெற்றி! அடுத்தது கண்ணனது தோல்வி! மூன்றாவதாக அறவாழியைப் போட்டியில் குதிக்காமல் தடுப்பேன்! பொன்மணியை அவன் கையில் கொடுப்பேன். எனக்கு வேண்டியதெல்லாம் என் தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதுதான். அந்தக் கண்ணனுக்கு கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கழுதை ஊர்வலம் விடுவதுதான்! என் தந்தையை அவமானப் படுகுழியிலே தள்ளிய குடும்பத்தைப் பழிவாங்கிக் கொள்ள சரியான நேரம் வந்து விட்டது! கண்ணனுடைய அப்பன் என் தாயின் கற்போடு விளையாட முயன்றானாம். அதைத் தடுத்து என் தாயைக் காப்பாற்ற முயன்ற தந்தையைச் செருப்பினால் அடித்தானாம். இந்தச் செய்தியைக் கூறி விட்டல்லவா என் தந்தை உயிர் துறந்தார்! “உன்னை மட்டுமல்லடா—உன் மகனை—என் மகன் செருப்பால் அடிப்பான். உன் பேரனை என் பேரன் செருப்பால் அடிப்பான்!” என்று சபதம் செய்தானாம் அந்தச் சண்டாளன்! அய்யோ; அவன் என் கையில் சிக்கவில்லை. இப்போது அவன் மகன்தான் சிக்கினான்!”

சிங்காரம், கண்களில் கனல் பறக்கத் தோளைத் தட்டிக் கொண்டு காளையிடம் நெருங்கினான். வேக வேகமாகப் பொன்மணியும் அங்கு வந்து சேர்ந்தாள். அவளது மேனி நடுங்கிக் கொண்டிருந்தது. காளையைச் சுருளிமலை அவிழ்த்து விட்டான். அதன் முதுகிலே ஒரு தட்டு தட்டிவிட்டான். சிங்காரமும் காளையும் நெடுநேரம் போரிட்டார்கள். புழுதி பறந்தது திடலில். சிங்காரத்தின் உடம்பெல்லாம் காயம்! வெற்றி அவனுக்கா — அல்லது காளைக்கா—என்பதை யாருமே நிர்ணயிக்க முடியாமல் தவித்தனர். சிங்காரத்தின் உடல் வலிமைச் சிறிது சிறிதாகக் குறைந்தது. அதற்கு மாறாக உள்ளத்தின் வலிமை அதிகமாயிற்று. எப்படியும் ஜெயித்தே தீரவேண்டுமென்று காளையின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். காளை, மிக லாவகமாக ஒதுங்கித் தன் அழுத்தமான கொம்புகளால் அவன் தொடையைக் கிழித்து அவனைக் கீழே சாய்த்து விட்டது!

சிங்காரத்தினால் எழ முடியவில்லை. மண்ணில் குப்புற வீழ்ந்தான். சுருளிமலை ஓடிப் போய்க் காளையைப் பிடித்துக் கொண்டான். சிங்காரத்தை வைத்தியர்கள் சிலர் சூழ்ந்து கொண்டு சிகிச்சைக்குத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள்.

“சிவாவுக்கு சிறிது நேரம் ஓய்வு வேண்டும்!” என்று கூறி சுருளிமலை. காளையை ஓட்டிக் கொண்டு போனான்.

பிறகு பதினைந்து நிமிடம் கழித்துக் காளையுடன் சுருளிமலை திடலுக்கு வந்தான்.

இப்போது கண்ணன், போருக்குத் தயாராக நின்றான். சீட்டு அவன் பேருக்கு விழுந்தது. கண்ணனின் முதல் பாய்ச்சல் மிக முரட்டுப் பாய்ச்சலாக அமையவே, காளை சற்று மிரண்டு கீழே விழுந்தது. ஆயினும் உடனே எழுந்து கண்ணன்மீது பாய்ந்தது. போட்டியைக் கண்ணுற்ற அனைவரும் வெற்றி கண்ணனுக்கே என முடிவு கட்டினார்கள். கற்பூரத்தின் நெஞ்சு நெருப்பாகியது. தீச்சட்டி சிங்காரத்தைவிட கண்ணன் வெகு தீவிரமாகக் காளையுடன் போரிட்டான்.

போரின் போக்கு கண்ட அறவாழி, பொன்மணி நின்ற பக்கம் திரும்பினான். அவள் கண்களை மூடிக் கொண்டு எங்கேயோ சிந்தையை அலைய விட்டுக் கொண்டிருந்தாள்.

அக்காளையும் அறவாழியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்ற சுருளிமலை அக்காளிடம் சென்று, “அக்கா! கவலைப்படாதே! கண்ணன் தோற்றுவிடுவான்!” என்றான்.

“அவன் தோற்றால் எனக்கென்ன? அறவாழி ஜெயிக்க வேண்டுமே!” என்று அவள் சொல்லவில்லை. நினைத்துக் கொண்டாள்.

அதற்குள், கூட்டத்திலிருந்து பெருங் கூச்சல் கிளம்பியது. கோயில் காளை சிவாவின் காலடியிலே கண்ணன் ரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தான். அவனது வயிற்றுப் புறத்தைக் காளையின் கொம்புகள் ருசி பார்த்துவிட்டன.

“உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லை!” எனத் தைரியம் கூறி வைத்தியர்கள் அவனை அவசர அவசரமாகத் தூக்கிச் சென்றனர். அறவாழியை பொன்மணி பார்த்தாள். ஓடிவந்து அவன் காலிலே விழுந்து,

“என்னை மறந்துவிடுங்கள்—இந்தப் போட்டி உங்களுக்கு வேண்டாம்!” என்று கதறினாள்.





## எமது ஏழாவது வெளியீடு!

வீரத்தாலும் விவேகத்தாலும் வீழ்த்த முடியாத செயல் வீரனை வீணர்கள் சதியால் சாகடித்தனர்! அதன் எதிரொலி!...நீதி சதியைச் சாகடித்தது! இத்தகைய அரும் பெரும் வீர உணர்ச்சிகளைக் கொண்ட சிறந்த வரலாற்று நூல்!

சிந்தனைச் சிற்பி

சி. பி. சிற்றரசு அவர்களின்

**“ரோம் நாட்டு வீரன்”**

விலை ரூ. 1—50

எழுதுங்கள்:

முத்துவேல் பதிப்பகம்,

77, மதுரை சாலை, — திருச்சிராப்பள்ளி—8.


## டாலர் சந்தையிலே..

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

தன் கடவுளை நம்புவதில்லை என்று சொல்வது மதிப்புக் குறைவானதா?

சபைத்தலைவர்(கோபத்தோடு): நீங்கள் மறுபடியும் கடவுளை இழுத்துக் கொண்டு வருகிறீர்கள். அதை மறுபடியும் இழுக்காதீர்கள்.

குன்ஸ்ரு: நிதியமைச்சர் செய்ததுபோல மந்திரிகள் ஒருவரைப்பற்றி ஒருவர் பொது மன்றத்தில் இப்படி பேசிக் கொள்ளலாமா?

நேரு..................?

புபேஷ்: தயவு செய்து பதில் சொல்லுங்கள்!

நேரு: ஐயா! மந்திரிகள் மட்டுமல்ல; மற்றவர்களும் சில கட்டுப்பாடுகளைக் கடைப் பிடிக்க வேண்டும். அதிலும் முக்கியமாக ஒரு அரசாங்கத்தின் மந்திரியார்...? மந்திரிகளைத் தவிர இருவர் ஒருவருக்கொருவர் சில கட்டுப்பாடுகளினாலேயே பழகுகிறார்கள்.

புபேஷ்: நிதியமைச்சர் இது போன்ற அபிப்பிராயங்களை வைத்திருப்பதால்தான் அவரே பிரதமருக்கு அடுத்த வாரிசு என்று பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் கொண்டாடப்படுவது பிரதம மந்திரிக்குத் தெரியுமா?

சபைத் தலைவர்: இது அநாவசியமானது!

—இதுதான் விவாதத்தின் சுருக்கம்!

கடன் கேட்கச்சென்ற இடத்தில் இப்படிக் கண்டபடி உளறி வைப்பானேன்? பொறுப்புள்ள அமைச்சர் அவர்; இப்படி பொருத்தமற்ற விளக்கங்களைத் தருவானேன்?

இந்தக் கேள்விகள் அவரிடமும் கேட்கப்பட்டன. ஆனால், அவர் அவைகளுக்குத் தந்த பதிலும் மிகமிக வேடிக்கையாக இருக்கிறது!

‘டைம்’ நிருபர் தனது பேட்டியைத் தவறாக ‘ரிப்போர்ட்’ செய்திருப்பதாகக் கூறியும் அதை யாரும் உண்மை என்று நம்பியதாகத் தெரியவில்லை. மொரார்ஜி இப்படிப் பேசியிருந்தாலும் பேசியிருப்பார் என்றுதான் எண்ணம் உலவுகிறது.

வயிற்றைவிட மானத்திற்கு மதிப்பு தருவது இருபதாம் நூற்றாண்டு. இந்த காலத்திலே பிற நாட்டின் சுயமரியாதையை ஏலம் போட முற்பட்டிருக்கிறார் மொரார்ஜியார்!

இவரா இந்த நாட்டு அமைச்சர்?

இவரா நேருவுக்குப் பிறகு இந்த நாட்டுக்கு பிரதமராகப் போகிறார்?

அந்தோ; இந்தியாவே!...உன் நிலை இதுதானா என்பதைத் தான்—வேறென்ன செய்ய முடியும் நம்மால்?

-மாறன் எம். ஏ.

# டாலர் சந்தையிலே பாரதத்தின் சுயமரியாதை ஏலம்! ஏலம்!!

வீட்டிற்குள் குழந்தைகள் கூழுக்கு அழுதாலும் வெளியிலே தாங்கள் பன்னீரிலே வாய் கொப்பளிப்பதாகப் பலர் வாயடிப்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்!

தனிப்பட்டவர்கள் விஷயமே இப்படி என்றால், ஒரு நாட்டின் நிலையைப்பற்றி நாம் அதிகம் கூறத் தேவை இல்லை.

வெளி நாட்டிலிருந்து அவ்வப்போது இங்கு வருகிறவர்கள் ஒன்று தங்களைத் தாங்களே புகழ்ந்துகொள்வார்கள்; அல்லது உண்மை நிலையை எடுத்துரைப்பார்கள்.

பிரயாண நேரம் அதிக அளவு குறைக்கப்பட்டிருக்கும் இந்தக் காலத்தில், பத்திரிகைகள் உண்மை விளம்பிகளாக உலா வரும் இந்த யுகத்தில், உண்மையை மிகைப்படுத்திக் கூறி, எந்த ராஜதந்திரியும் எவரையும் ஏய்த்துவிட முடியாது. ஆனால், 'இந்தியா' மட்டும் இதற்கு விதி விலக்காகவே இருந்துவருகிறது!

இங்கிருந்து வெளி நாடு செல்லும் கனம் காங்கிரஸ் அமைச்சர்கள் மிகைப்படுத்திக் கூறு விட்டாலும் உண்மையையாவது கூறக்கூடாதா?

திறமைக்குத்தான் அவர்களுக்குப் பஞ்சம் என்றால், உண்மைக்குக்கூடவா வறுமை ஏற்பட வேண்டும்? அந்தோ, பரிதாபம்!

முன்பு அமெரிக்காவிடமிருந்து கடன் வாங்குவதற்காக நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் சென்றார்; இந்த உப கண்டமே வெட்கித் தலை குனியும் அளவுக்கு அவமானகரமான செய்திகளை "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகைக்குப் பேட்டி தந்தபோது வெளியிட்டார்.

இந்த முறை அதே நாற்காலியை ஆதீனப்படுத்திக்கொண்டிருக்கும் கனம் மொரார்ஜி தேசாய் அட்சய பாத்திரத்தை ஏந்தியவாறு அமெரிக்கா சென்றார். இப்போதும் அதே கதை தான். "டைம்ஸ்" பத்திரிகைக்குப் பேட்டி யளித்தபோது அவர் கூறிய கருத்துக்கள், அவர்கள் தினம் தினம் பாமாலை சூட்டிப் புகழ்ந்துகொண்டிருக்கும் 'பாரத் மாதா'வுக்கு பெருமைத் தேடித் தருவதாக இல்லை!

அவர் தந்த பேட்டி விபரத்தைப் பாருங்கள்:

"இந்தியர்கள்: எங்களுடைய மோசமான குணம் என்னவென்றால் நாங்கள் எங்கள் கூட்டாளிகளுக்கு எதிராக அதிகம் பேசுகிறோம் என்பதுதான். நாங்கள் பலகீனமான ஜனங்கள்—உடல் வலியிலும், மன வலியிலும் கோழைகள். இரண்டாயிரம் வருஷ அடிமைத்தனமானது தேசத்தின் துணிவை அமிழ்த்தி எங்களை எதைக் கண்டும் பயப்படச் செய்துவிட்டது. பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் நாங்கள் வரி கொடுக்காமல் ஏமாற்றுவதற்குக் கற்றுக் கொண்டோம். நாங்கள் சட்டங்களை இரகசியமாக உடைத்தெறிகிறோம். பொய் சொல்வதால் நல்ல உபயோகம் என்று கண்டு பிடித்துக் கொண்டோம். ஆனால், ஜனங்கள் இப்போது துணிவாகப் பேசுவதற்குக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்......"

—இதுதான் மொரார்ஜி தேசாய் கடல் கடந்து சென்று அமெரிக்கர்களுக்குப் படம் பிடித்துக் காட்டும் இந்தியர்களின் குணாதிசயங்கள்!

இந்தியர்கள் உடல் வலிமையில் கோழைகளாம்; மன வலிமையிலும் அப்படித்தானாம்— கூறியிருக்கிறார், தேசாய்!

அவர் குறிப்பிட்ட இந்தியர் என்பார் திராவிடரல்லாதாரைக் குறிக்குமேயானால், நாம் அதைப்பற்றிக் கவலைப்படுவதாக இல்லை. ஆனால், இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் தற்காலிகச் சூழ்நிலையில் இந்தியர்கள் என்பது நம்மையும் குறிப்பிடுவதாகத்தான் இருக்கிறது.

பாவம், குதிரையைத் தவிர வேகமாகச் செல்லுவதற்கு வேறு போக்குவரத்து வசதி இல்லாத அந்தக் காலத்திலே; கடல் மடை திறந்தாற்போல் ஆயிரமாயிரம் இரண களசூரர்களை அணி வகுப்பாகக் கொண்டு; காடும்மலையும் ஆறும் பாலையும் நிறைந்த ஆயிரக் கணக்கான மைல்களைத்தாண்டி வட நாடு வென்று; இமயத்தின் பிடரியிலே இலாஞ்சனையைப் பொறித்து வாகை மாலை சூடிய சேரன் செங்குட்டுவன் பரம்பரையிலே வந்த நாம் கோழைகளாம்!

காற்றடித்த திக்கில் கப்பலைச் செலுத்தி—சுழலுக்கும் சுறுவுக்கும் அஞ்சாமல் — ஆழ்கடல் மிதந்து — இலங்கை வென்று -இரண்டாயிரம் சிங்களவரைப் போர்க் கைதிகளாக்கி வெற்றிப் பவனி வந்த வீரக் குடியிலே தோன்றிய நாம் பயந்தாங் கொள்ளிகளாம்!

கடாரத்திலே படையை மோதி—சிற்றெறும்பை நசுக்குவதைப்போல் எதிரிக் கூட்டத்தை பூழ்தி செய்து எக்காளமிட்ட நமது பரம்பரை மூதுகெலும்பில்லாத கூட்டமாம்!

காடாறு மாதம்—நாடாறு மாதம் என்று ராஜாங்கம் நடத்திய விக்கிரமாதித்தர்கள் வேண்டுமானால் அந்தக் கூட்டத்திலே சேர்க்கப்படலாம். ஆனால் புவி வாழ்வு முழுவதையும் போர்க்களத்திலே கழித்து, காதலியரின் கனி மொழியினைக் கேட்பதற்குக்கூட நேரமில்லாமல் வாழ்ந்த நம் இனத்தை மொரார்ஜியார் எப்படி அந்தக் கோழைகளின் கும்பலிலே சேர்த்தார்?

புறநானூற்றின் பெருமைமிகு ஏடுகளை அவர் புரட்டி இருக்காவிட்டாலும், அவர் படித்த வரலாற்று நிகழ்ச்சிகளைக்கூடவா மறந்துவிட்டார்!

கலிங்கத்துப் பரணி அந்த நேரம் அவர் மனக்கண் முன்னால் காட்சி யளிக்காவிட்டாலும், இதுவரை எந்த வட நாட்டு வேந்தனும் விந்தியத்தின் விளிம்பு தாண்டி காலடி எடுத்துவைத்ததில்லை என்ற அசைக்க முடியாத உண்மையைக்கூடவா அவர் உதாசினம் செய்யவேண்டும்?

அவ்வளவு ஏன்?

அவர் பிறந்து வளர்ந்து பிரதிநிதியாகக் கொலு வீற்றிருக்கும் அந்த வட நாட்டில்கூட வீரர்கள் வாழ்ந்திருக்கிறார்களே!

போரிலே புறமுதுகு காட்டுவதைவிட சாவதேமேல் என்று சங்கல்பம் பூண்டு வாழ்ந்த ராஜபுத்திரர்களது வீரமென்ன சாமான்யமானதா?

அக்கினி குண்டத்திலே அணி அணியாய் வீழ்ந்து வெந்தழலில் வெந்துமாய்ந்த அந்த மறக் குலத்துப் பெண்மணிகளைத் தான் மறக்கமுடியுமா?

மொகலாயர்களை பூனையைக் கண்டு பயந்தோடும் எலிகளைப் போல ஓட ஓட விரட்டியடித்த சிவாஜியின் சிங்க நெஞ்சம் யாருக்கு உண்டு?

தென்னகம் தவிர இந்திய உபகண்டத்தை 'ஏகப்படுத்தி' வைத்த அக்பரின் 'ஆட்சியியல்' அமெரிக்காவை ஐக்கியப்படுத்திய ஆப்ரகாம் லிங்கனின் ஆட்சி முறைக்கு இளைத்ததா?

—இவையனைத்தையும் மறந்துவிட்டு, இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற உணர்வை அகற்றிவிட்டு—பாரத் வர்ஷத்தின் எதிரியைப்போல் பறை சாற்றியிருக்கிறார் மொரார்ஜி தேசாய்!

"பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் நாங்கள் வரிகொடுக்காமல ஏமாற்றுவதற்குக் கற்றுக்கொண்டோம்...நாங்கள் சட்டங்களை ரகசியமாக உடைத்தெறிகிறோம்..."

—இப்படியும் கூறினாராம் மொரார்ஜியார்!

உப்பு வரி கொடுக்காமல் உரிமையைக் காப்பாற்றுவதற்காக அன்று மூவர்ணக் கொடி ஏந்திக்கொணடு அவர்கள் நடத்தியது விடுதலைப் போராட்டத்தின் ஒரு அங்கமல்லவாம்? அது வரி கொடுக்காமல் ஏமாற்றுவதற்கு கற்றுக்கொண்ட பாடமாம்!

மகாத்மா காந்தி உலகத்துக்கெல்லாம் ஒரு புது வழி கண்டு சொன்னாரே; அந்த அமைதியான சட்ட மறுப்பு இயக்கம்—சுதந்திரப் போருக்காக உபயோகப்படுத்தப்பட்ட ஒரு சக்தி வாய்ந்த கருவியல்லவாம்! பின்னால் சட்டத்தை ரகசியமாக உடைத்தெறிவதற்காக அவர்கள் ஏற்றுக் கொண்ட ஒத்திகையாம்!

மொரார்ஜியின் பேச்சுக்கு இப்படித்தான் பொருள் பிரிக்க வேண்டியிருக்கிறது.

"...பொய் செல்வதால் நல்ல உபயோகம் என்று கண்டு பிடித்துக்கொண்டோம்..."

—இதுவும் அவரது கூற்றுத் தான்!

அப்படிக் கண்டுபிடித்தது யார்? இந்தியர்கள் என்ற கூட்டுப் பெயரிலே வரும் இந்த உப கண்டத்துப் பொதுமக்களின் பிரதிநிதிகளா? அல்ல. பணம் கொடுத்து ஓட்டு வாங்கி பதவி பிடிக்கும் காங்கிரஸ்காரர்கள்! அவர்கள்தான் பொய் சொல்வதால் நல்ல உபயோகம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மொரார்ஜியார் 'நாங்கள்' என்பதற்கு 'காங்கிரஸ்காரர்கள்' என்று பொருள் கூறுவாரேயானால், பொதுமக்கள் அனைவரும் அவருக்கு கைலாகு கொடுத்திருப்பார்கள்! ஆனால், அந்தோ! இந்தியர் என்று அழைக்கப்படும் நம்மையும் உட்கொண்ட அத்தனை பேருக்குமல்லவா அவமானத்தைத் தேடித் தந்திருக்கிறார்!

இவ்வளவும் ஏன் என்று நினைக்கிறீர்கள்?

வாய் தவறி வந்ததா? அல்லது விளையாட்டுப் பேச்சா? இரண்டுமல்ல!

நமது வீட்டு வாயிலிலே பிச்சைக்காரர்கள் அழுது புலம்புவதை அன்றாடம் பார்த்திருக்கிறோம். யானைக்குட்டிபோல அப்பாவும் அம்மாவும் வீட்டிலே இருப்பார்கள். ஆனால் பிச்சைக்காரச் சிறுவனோ இரக்கமென்னும் ஒரு பொருள் நம்மிடம் இருக்கிறதா என்று சோதிப்பதற்காக, தான் யாருமற்ற அனாதை என்று செந்நீரையெல்லாம் கண்ணீராகக் கொட்டுவான்!

மொரார்ஜியார் கடைப்பிடிப்பதும் இதே வழிதான்! எப்படியாவது அமெரிக்கர்களின் இரக்

[தொடர்ச்சி பக்கம்—7]

தி. மு. க. தலைமை நிலைய முதல் வெளியீடு!

வளம்காண வழி

அறிஞர் அண்ணாவின்

அரிய கருத்துரை

விலை 8 அணா

விவரங்களுக்கு:—

தி. மு. க. தலைமை நிலையம்—'அறிவகம்'—சென்னை — 13.

யானை சிங்கம் சுருட்டுகள்

TRADE MARK



T.V. முத்துகிருஷ்ணன்
திருச்சி-2


## மனிதனின் கதை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பங்குண்டு. கன்ஃப்பூஷியஸ் எந்த விதமான மதத்தையும் ஸ்தாபிக்கவில்லை. வாழ்க்கை முறைகளையும் நீதிகளையும் மட்டுமே வகுத்துச் சொன்னார். ஆகவேதான் அவர் 'நீதிபோதகர்' (Moralist) என்று அழைக்கப்படுகிறார். இந்த விஷயத்தில் புத்தரோடு அவரை ஒப்பிடலாம். கன்ஃப்பூஷியசும் புத்தரும் ஒரே காலத்தவர் என்பதையும் நீ மறந்து விடக்கூடாது. மக்களின் கடமைகளை ஐந்து வகையாக கன்ஃப்பூஷியஸ் பிரித்தார். ஆள்பவருக்கும் குடிமக்களுக்கும் இடையே நிலவவேண்டிய கடமை; கணவனுக்கும் மனைவிக்குமிடையே நிலவ வேண்டிய கடமை; பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே நிலவ வேண்டிய கடமை; மூத்தோருக்கும் இளையோருக்கும் இடையே நிலவ வேண்டிய கடமை; நண்பர்களுக்கிடையே நிலவ வேண்டிய கடமை—என்பனவாகும்.

ஆண்டவனின் அருள் பெற்றவர் என்று கன்ஃப்பூஷியஸ் தன்னைக் கூறிக் கொள்ளவில்லை. புத்தரைப் போலவே கடவுளைப் பற்றியோ, இறந்தபின் மனித வாழ்வைப் பற்றியோ, மோட்ச லோகத்தைப் பற்றியோ கன்ஃப்பூஷியஸ் கவலைப்படவில்லை. 'மனிதர்களுக்குச் சேவை செய்யாதவன் ஆத்மாவுக்குச் சேவை செய்ய முடியாது' என்பது அவரது கொள்கை. 'உலக வாழ்க்கையில் அக்கறை காட்டி அதை உயர்த்த முயல்பவனே மகான்' என்பது அவருடைய கருத்து. 'மக்களினத்தை வெறுத்தொதுக்கிவிட்டுக் காட்டிலே போய் பறவைகளோடும் மிருகங்களோடும் வாழ்வதில் பயனில்லை' என உபதேசித்தார். அந்தக் கொள்கைகளின்படியே வாழ்ந்த அவர் தன் 69-ஆம் வயதில் காலமானார்.

கன்ஃப்பூஷியசைப் போலவே சீன மக்களின் வாழ்க்கையை அந்தக் காலத்தில் உருவாக்க முயன்ற மற்றொரு சிந்தனையாளர் லோட்ஸி. லோட்ஸியின் கருத்துக்கள் கன்ஃப்பூஷியசின் கருத்துக்களிலிருந்து பெருமளவு மாறுபட்டவை. ஹிந்து மதத்தின் உபநிஷதக் கருத்துக்களோடு ஒத்திருப்பவை. சுகத்தையும் அதிகாரத்தையும் துறந்துவிட்டு மக்கள் எளிய வாழ்க்கை வாழ வேண்டுமென்று லோட்ஸி போதித்தார். புத்தருடைய உபதேசங்களுக்கு நேர்ந்த கதியே லோட்ஸியின் உபதேசங்களுக்கும் நேர்ந்தது. அவருடைய கோட்பாடுகளில் பிற்காலத்தில் கதையும் கற்பனையும் புகுத்தப்பட்டன. லோட்ஸியின் பேரால் புராணங்களே புனையப்பட்டன. ஆயினும் லோட்ஸியின் போதனைகள் சீன மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்தன. ஆடம்பரத்தை ஒதுக்கி, உலக இன்பங்களை வெறுத்து, எளிய வாழ்க்கையில் ஈடுபட்டனர். கன்ஃப்பூஷியஸ் சீன நாட்டின் வட பகுதியில் தனது கோட்பாடுகளை வளர்த்தார். தென் பகுதியில் லோட்ஸி தனது தத்துவங்களைப் போதித்தார். இப்பொழுதுங்கூட பீகிங்கைச் சுற்றியுள்ள வட பகுதி மக்கள் உலகியலில் அக்கறை உள்ளவர்களாகவும், நான்கிங்கைச் சுற்றியுள்ள தென் பகுதி மக்கள் ஆத்மீகத் துறையில் அக்கறை உள்ளவர்களாகவும் இருப்பதைப் பார்க்கலாம்.

கன்ஃப்பூஷியஸ், லோட்ஸி போலவே சீன மக்களின் வாழ்க்கையை உருவாக்கியதில் புத்தருக்கும் பெரும் பங்குண்டு. புத்த மதம், குறிப்பாக அசோகர் காலத்தில் சீனாவில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. சீன மக்களின் வாழ்க்கையில் இம்மூவருடைய கோட்பாடுகளும் ஊடுருவி நிற்பதை இன்றும் காணலாம். சீனர்கள் பொறுமைசாலிகள்; சட்டத்தை மதிப்பவர்கள்; அமைதியையே நாடும் குணமுடையோர். எனவேதான் புயலும் வெள்ளமும், போரும் நோயும், இன்ன பிற தொல்லைகளும் பல நூறு ஆண்டுகளாக அந்த நாட்டை அலைக்கழித்தாலும் சீன சமுதாயம் அவற்றைத் தாங்கி வளர்ந்து வந்திருக்கிறது. குடும்ப வாழ்க்கையே சீன சமுதாயத்தின் அஸ்திவாரமாக இருந்து வருகிறது. குடும்ப வாழ்க்கையில் சீன மக்கள் காட்டும் ஆசையையும் அக்கறையையும் பெர்ல்பக் அவருடைய நாவல்களில்—குறிப்பாக 'நல்ல பூமி'யில்—சித்தரித்திருப்பதை நீதான் படித்திருப்பாயே! குடும்பம் வாழ எவ்வகையான தியாகத்தையும் செய்யத் தயாராயிருப்பவர்கள் சீனர்கள்; ஜாதி வேற்றுமை அவர்களைப் பிரிக்கவில்லை! கன்ஃப்பூஷியஸ், லோட்ஸி, புத்தர்—ஆகியோர் அமைத்துக் கொடுத்த அஸ்திவாரத்தின்மீது கட்டப்பட்டுள்ள கட்டிடமல்லவா சீன சமுதாயம்! கார்ல் மார்க்சையும் சேர்த்து நான் பேசவில்லையே என உனது கம்யூனிஸ்ட் சிநேகிதிகள் வருந்தக்கூடும். அதைப் பற்றித்தான் பின்னால் விரிவாக எழுதப்போகிறேனே!

சிறுசிறு துண்டுகளாகச் சிதறிக்கிடந்த சீன நாட்டை ஒன்றாக்கி ஷி ஹுவாங்டி என்ற மன்னன் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்டான். இது கி. மு. 220-ல் நடந்தது. அதன்பின் சீன நாட்டில் ஒற்றுமையும் வளமும் தோன்றின. ஆயினும் வடக்கேயிருந்து ஹூணர்கள் அடிக்கடி படையெடுத்துத் தொல்லை விளைவித்தனர். அதைத் தடுக்க ஷி ஹுவாங்டி நீண்ட பெரிய சுவர் (The Great Wall of China) ஒன்றைக் கட்டினான். அதுவே உலக அதிசயங்களுள் ஒன்றாகவும், மனித உழைப்பின் சாதனைக்குச் சின்னமாகவும் விளங்கி வருகிறது.

அதிகம் எழுதிவிட்டேன். உனக்கும் அயர்ச்சியாக இருக்கும். மற்றவை பின்.

உன் அன்புள்ள,
**அகத்தியன்.**

## டாலர் சந்தையிலே....

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கத்தைச் சம்பாதித்தால்தான் அதன் வழியே டாலரை சம்பாதிக்கமுடியும் என்று முடிவு செய்துகொண்டு, இந்த உபகண்டத்து மக்களின் சுயமரியாதையைப் பணயம் வைத்து வாய்ச் சவடால் விட்டிருக்கிறார், அந்த குஜராத்திக்காரர்!

அது மட்டுமா?

பண்டிதரையும் அவர் விட்டு வைக்கவில்லை. எஜமான் அருகில் இருக்கும்போது குழைந்து கொடுக்கும் வேலைக்காரர்கள், எஜமான் அப்பால் சென்றதும் எகத்தாளம் போடுவதைப் பார்த்திருக்கிறோம்.

அதைப்போல, பண்டிதருக்கும் தனக்கும் இடையே ஆயிரக்கணக்கான மைல்கள் இருக்கின்றன என்ற தைரியத்தில் அவரைப்பற்றி நாம் நினைத்தும் பார்க்கமுடியாத விபரங்களை எல்லாம் கூறியிருக்கிறார்.

"நேரு: மனிதரிடம் இயல்பாக உள்ள குறைகள் எளிதில் நீக்க முடியாதவை! அவர் குழந்தை பருவத்திலிருந்து அலையின் உச்சியிலே பிரயாணம் செய்திருக்கிறார். ஆரம்பத்திலிருந்தே அவர் தலைவராக்கப் பட்டிருக்கிறார்...... எந்தத் தவறையும் செய்துவிட்டு அவரால் தப்பித்துக் கொள்ளமுடியும்......தன்னை விட்டால் வேறு வழியில்லை என்ற உணர்ச்சி அவருள்ளே வளர்ந்தது...அவர் கடவுளிடத்திலே மட்டும் நம்பிக்கை வைத்திருப்பாரேயானால், அவரால் இன்னொரு காந்தியாகி இருக்கமுடியும். அதனால், அவர் விஞ்ஞான பூர்வமான வழியே ஒரே வழி என்று நம்பிக் கொண்டிருக்கிறார்..."

—இந்தக் கருத்தை ஒரு காங்கிரஸ்காரர்; அதுவும் காங்கிரஸ் அரசாங்கத்தில் முக்கிய ஸ்தானத்தை வகிப்பவர் சொல்லியிருக்கக்கூடாது என்பதைத் தவிர, நாம் ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

ஆனால் அதே நேரம் கடவுளிடத்தில் நேருவுக்குள்ள நம்பிக்கையின்மை இப்போதும் முன்புள்ள தீவிரத்தோடு நீடித்திருக்கிறதா என்பதிலே ஐயப்பாடு உண்டு!

முன்பொருநாள் வழக்கு மன்றத்திலே, நீதிபதிக்கு முன்பாக "சத்தியம் செய்ய மாட்டேன்" என்று கர்ஜனை செய்த நேருவுக்கும் இப்போது கும்பமேளாவில் கலந்து கொண்டு கூத்த

[தொடர்ச்சி பக்கம்—8]

# திராவிடநாடு விடுதலை வாரம்

★

## 17-9-58 முதல் 23-9-58 வரை

## நாடு எங்கணும் கொண்டாட வேண்டுகோள்

★

17—9—58—ம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழா நாளும், பத்தாவது ஆண்டு துவக்க நாளும் ஆகும்.

அந்த நாளை ஒட்டி வரும் ஒருவார காலத்தை—அதாவது 17—9—58 முதல் 23—9—58 வரை—திராவிடநாடு விடுதலை வாரமாகக் கொண்டாடும்படி கிளைக் கழகங்களையும், துணை அமைப்புகளையும் விடுதலை வேட்கையன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழு முதல் இலட்சியமும் மூல முழக்கமுமான 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற விடுதலை வேட்கை யுணர்வைத் திராவிடப் பெருங்குடிமக்களிடத்தே ஏற்படுத்தவும், அதன் காரண காரிய விளக்கங்களை இந்த நாட்டினருக்கும், பிற நாட்டினர்க்கும், ஆளவந்தார்க்கும் தெளிவாக உணர்த்தவும், திராவிடநாடு விடுதலை வாரத்தை நாடெங்கணும் கொண்டாடக் கேட்டுக்கொள்கிறோம்.

உறுப்பினராகாதவர்களை உறுப்பினர் ஆக்குதல், கிளைக் கழகங்கள் இல்லாத ஊர்களில் புதிய கிளைகளை நிறுவுதல், கொள்கை விளக்கத் துண்டு அறிக்கைகள் வெளியிடுதல், இலட்சியங்களைச் சுவரொட்டிகள் மூலம் பரப்புதல், அமைதியான முறையில் ஊர்வலங்கள் நடத்துதல், சிறப்பான முறையில் பொதுக்கூட்டங்கள் கூட்டுதல், வாய்ப்பு வசதிக்கேற்ப கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல்—போன்ற சீரிய பணிகளில் மிக மும்முரமாக ஈடுபடும்படி கழகத் தோழர்கள்—ஆதரவாளர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

கழக ஏடான 'நம் நாடு' இதழை ஊர்தோறும் பரப்பத் தனி முயற்சிகள் எடுக்குமாறும் விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வாழ்க தி. மு. கழகம்!
வாழ்க வளமார் திராவிடம்!
திராவிடநாடு திராவிடருக்கே!

'அறிவகம்'
சென்னை-13
13—9—58

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. க.

## டாலர் சந்தையிலே...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

டிக்கும் நேருவுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது?

கடவுளிடத்தில் நம்பிக்கை இல்லாத நேருவா 'இராம நவமி' யன்று இராவணன் உருவத்துக்குக் கொள்ளி வைக்கும் காட்டுமிராண்டி வைபவத்தைக் கண் குளிரக் கண்டு களிக்கிறார்?

இல்லை; இல்லை. அந்தப் பகுத்தறிவுவாதி என்றைக்கோ மறைந்து, இப்போது பழைய பத்தாம்பசலி நேருதான் உலவிக் கொண்டிருக்கிறார்!

இதுபற்றி டெல்லி ராஜ்ய சபையில் விவாதம் எற்பட்டது.

புபேஷ் குப்தா என்ற கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கேள்விமேல் கேள்வி கேட்டு எல்லோரையும் திக்கு முக்காட வைத்திருக்கிறார்.

★ புபேஷ் குப்தா: ஒரு மந்திரி சபை உறுப்பினர் முழுதேசத்தைப் பற்றியும் அவதூறு கூறினால் அதற்கு மாற்று என்ன? பிரதம மந்திரியார் இதுபோல் அவதூறு கூறிய வேறு நபர்கள் இருப்பதாகவோ இருந்ததாகவோ கூற முடியுமா?

நேரு: இதென்ன சரித்திரப் பரீட்சையா?

சபைத் தலைவர் (டாக்டர் ராதா கிருஷ்ணன்): நீங்கள் அவரை சரித்திரத்தில் பரீட்சை நடத்துகிறீர்களா?

புபேஷ்: பிரதமர் உலகச் சரித்திரம் எழுதியிருக்கிறார். நான் பரீட்சை வைத்தால்கூட அவர் பொருட்படுத்த மாட்டார்.

நேரு: எனக்கு எதிர்க் கட்சி உறுப்பினரைவிட சரித்திரம் அதிகம் தெரியும். (கடைசியாக) இதை பற்றி நான் எதுவும் சொல்வதற்கில்லை. அவர் (மொரார்ஜி) என்ன நினைத்தார் என்பதுபற்றி அவர்தான் பதில் சொல்ல வேண்டும். அவர் கற்பத்தடைப்பற்றி கூறியிருக்கிறார் (கூடாதென்று). அதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்.

★ ★ குன்ஷ்ரூ: மந்திரி சபை உறுப்பினர்கள் மொரார்ஜி தேசாய் பேசியபடி பிரதம மந்திரியைப்பற்றிப் பேசுவதற்கு உரிமை உண்டா?

நேரு: என்னைப்பற்றி மொரார்ஜி குறிப்பிட்டதுபற்றி நான் எதிர்ப்பு தெரிவிக்க விரும்பவில்லை.

குன்ஷ்ரூ: நான் இதுபற்றி ஜவகர்லால் என்ன நினைக்கிறார் என்று கேட்கவில்லை. 'இந்தியாவின் பிரதம மந்திரி' என்ன நினைக்கிறார் என்றுதான் அறிய விரும்புகிறேன்.

நேரு: பிரதம மந்திரி கடவுளை நம்புகிறாரா இல்லையா என்பது போன்ற சாதாரணமாக சட்ட மன்றங்கள் விவாதம் நடத்தாத பிரச்சினையைப் பற்றி அவர் பேசியிருக்கிறார். எனக்குத் தெரிந்தவரை மிஸ்டர் புபேஷ் குப்தா கடவுளை நம்பவில்லை.

புபேஷ்: நீங்கள் கூடத்தான் கடவுளை நம்புவதில்லை!

●

★ ★ ★ பி. கே. பி. சின்கா இந்த இரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஒரு மனி

[தொடர்ச்சி பக்கம்—5]




ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு